**கவனிக்க**.- 2024.11.22 ஆந் திகதிய 2412 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II ( தமிழ் மொழிமூலம் ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2413 - 2024 නොවැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2024.11.29

*2413 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 2306 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2305- B 082631 - 5,403 (2024/11)

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## யுனிசிஸ்ட் இன்ஜினியரிங் லிமிடெட் நிறுவனத்தின் தகைமை நிலை மாறியதன் காரணமாக

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் (கம்பனிகள் சட்டம்) பிரிவு 11(5) இன் கீழ் 2024, ஒற்றோபர் 8 ஆந் திகதியிலிருந்து யுனிசிஸ்ட் இன்ஜினியரிங் பிஎல்சி ( நிறுவனம்) கொழும்பு பங்குச் சந்தை உத்தியோகபூர்வ பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதற்கு இணங்க, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க சட்டத்தினின் 11(4) ஆம் பிரிவு மற்றும் 8(1) ஆம் பிரிவு ஆகியவற்றின் விதிகளின்படி 2024, நவெம்பர் 08 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிறுவனத்தின் பெயர் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளதாக இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*நிறுவனத்தின் முந்தைய பெயர்:* யுனிசிஸ்ட் இன்ஜினியரிங் பில்சி
*நிறுவனத்தின் புதிய பெயர்:* யுனிசிஸ்ட் இன்ஜினியரிங் லிமிடெட்

*சபையின் உத்தரவுப்படி,*

யுனிசிஸ்ட் இன்ஜினியரிங் பீஎல்சி லிமிடெட்,
ஹேலீஸ் குரூப் சர்வீசஸ் ( பிரைவேட்) லிமிடெட,
செயலாளர்கள்.

*2024, நவெம்பர் 20.*

*11- 304*

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த கம்பனி ஒன்றிணைக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர்:* இனோவேடிவ் மீடியா பப்ளிக் ரிலேஷன்ஸ் (பீவிடீ) எல்டீடி
*கம்பனி இலக்கம்:* PV *00314531*
*பதிவு அலுவலகம்: 141/1/*A, எல்வின் பிளேஸ், நுகேகொடை
*கூட்டிணைப்புத் திகதி: 2024, நவெம்பர் 07*

செயலாளர்கள்.

*11- 350*

---

### ஒன்றிணைத்தல் பற்றிய அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(3)* (b) *ஆம் பிரிவுக்கு அமைவாக*

*அல்மாஸ் கெப்பிடல் ( பிரைவட் ) லிமிட்டட் என்ற நிறுவனம் அல்மாஸ் ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் என்ற நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவுக்கு ஏற்ப ஒன்றிணைப்பிற்கான தீர்மானம் ஒன்றை அல்மாஸ் கெப்பிடல் ( பிரைவட்) லிமிட்டட் ( கம்பனி இல.* PV *6208) மற்றும் அல்மாஸ் ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் (கம்பனி இல.* PV*1773) ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகள் மேற்கொண்டுள்ளன என்பதோடு அதன் மூலம்*

*அல்மாஸ் கெப்பிடல் ( பிரைவட்) லிமிட்டட் மற்றும் அல்மாஸ் ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் ஆகிய நிறுவனங்கள் ஒரு தனி நிறுவனமாக ஒன்றிணைக்கப்படுவதோடு, ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனம் அல்மாஸ் ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் ஆகும்.*

*மேற் சொல்லப்பட்ட ஒன்றிணைப்பானது 2025, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*அல்மாஸ் கெப்பிடல் ( பிரைவட்) லிமிட்டட் ,*
*அல்மாஸ் ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிட்டட்.*

*11- 378*